

Dr. A.HENDRY
Founder - National President

# FEDERATION OF ALL INDIA REAL ESTATE ASSOCIATION

Reg.No.484/2012

No.23/12, Basement, Asian Apartments, 1st Cross Street,
Trustpuram, Kodambakkam, Chennai - 600 024

www.faira.co.in
73052 58889/fairadmn@gmail.com FAIRA-

FAIRA

**FAIRA கடித எண்: 073 / 2025.** **தேதி:10.03.2025.**

**பெறுநர்:**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்,**
**தமிழ்நாடு அரசு,**
**தலைமைச் செயலகம்,**
**செயின்ட் ஜார்ஜ் கோட்டை,**
**சென்னை - 600 009.**

**பொருள்: தமிழகம் முழுவதும் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் புதியதாக இணைக்கப்பட்டுள்ள கிராம ஊராட்சிகளில் அபிவிருத்தி செய்யப்படும் திட்டங்களுக்கு, நகரங்களின் அடிப்படையில் பதிவுத்துறை புதிய வழிகாட்டி மதிப்பு நிர்ணயம் செய்வது சம்பந்தமாக ;-**

**பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எமது பணிவான வணக்கங்கள்...**

நாடும் - ஏடும் - நாளும் போற்றும் வகையில் தமிழ்நாட்டினை அனைத்து துறைகளிலும் முன்னோடி மாநிலமாக மாற்றுவதற்கு தாங்கள் எடுத்து வருகின்ற சீரிய முயற்சிகள் நிமித்தம், தமிழ்நாட்டின் பல நகரங்கள் விரைந்து வளர்ச்சி கண்டு வருகின்றன. அதன் அடிப்படையில் பல ஊராட்சிகளின் தரத்தினை உயர்த்திடும் வகையில், அப்பகுதியின் வளர்ச்சி மற்றும் பெருகிவரும் மக்கள் தொகை விகிதாச்சாரத்திற்கு ஏற்ப பல நகராட்சிகளை மாநகராட்சிகளாகவும், பல பேரூராட்சிகளை நகராட்சிகளாகவும், பல ஊராட்சிகளை பேரூராட்சிகளாகவும் தரம் உயர்த்தி சிறப்பாக நிர்வாகத்தை செயல்படுத்தி வருகிறீர்கள்..

இப்படி தரம் உயர்த்தப்படும் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளின் எல்லைகளை விரிவாக்கம் செய்யும் திட்டத்தின் அடிப்படையில் இந்த நகர்புறங்களுக்கு அருகில் அமைந்திருக்கின்ற கிராம ஊராட்சிகளை இவைகளுடன் இணைக்கும் பணியும் நடந்தேறி வருகின்றது. இந்த செயல் திட்டமானது பாராட்டுதலுக்குரியது. ஏனெனில் விரைந்து வளர்ச்சியடைந்து வருகின்ற கிராம ஊராட்சிகளை மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளுடன் இணைக்கும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இச்சீரிய திட்டத்தின் மூலம் அந்தப் பகுதிகளின் அடிப்படைக் கட்டமைப்பு வளர்ச்சிகள் மேம்படுத்தப்படும். இதன் காரணமாக அப்பகுதி மக்கள் பெருமளவில் பயனடைவார்கள் என்கின்ற காரணத்தினால் இத்திட்டமானது மிகவும் வரவேற்கத்தக்கது.

அதேசமயம் இத்திட்டத்தின்படி மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளுடன் இணைக்கப்பட்டிருக்கின்ற கிராம ஊராட்சிகளில் அடிப்படைக் கட்டமைப்புகளை அப்பகுதியில் மேம்படுத்தி அபிவிருத்தி செய்வதற்கான செயல் திட்டங்களான நிறுவனங்கள், கட்டிடங்கள், வீட்டுமனை அபிவிருத்தி மற்றும் தனி வீடுகள், குடியிருப்பு திட்டங்களை முன்னெடுக்கும் பொழுது மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்களுக்கு பதிவுத் துறையின் புதிய வழிகாட்டி மதிப்பு நிர்ணயம் செய்யும் இனங்களில் (பதிவுத் துறை தலைவர் அவர்களின் சுற்றறிக்கை எண். 30103/எல்2/2023, நாள்:16.08.2023 இன் படி) நகர்ப்புறங்களுக்கு என நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய வழிகாட்டி மதிப்பின் அடிப்படையில் நிர்ணயம் செய்ய வேண்டும் எனவும், இது மேலிடத்து வாய் மொழி உத்தரவு எனவும் தெரிவித்து சம்பந்தப்பட்ட மாவட்ட பதிவாளர்கள் வலியுறுத்துகின்றனர்.



# FEDERATION OF ALL INDIA REAL ESTATE ASSOCIATION

Reg.No.484/2012

No.23/12, Basement, Asian Apartments, 1st Cross Street,
Trustpuram, Kodambakkam, Chennai - 600 024

**Dr. A.HENDRY**
Founder - National President

www.faira.co.in
73052 58889/fairadmn@gmail.com

FAIRA-

FAIRA

சமீபத்தில் தான் இந்த கிராம ஊராட்சிகள் புதியதாக தரம் உயர்த்தப்பட்டு, விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கின்ற மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் பதிவுத் துறை அதிகாரிகள் இதனை கவனத்தில் கொள்ளாமல், பதிவுத் துறையின் வருவாயை மட்டும் நோக்கமாகக் கொண்டு, அபிவிருத்தி செய்யும் திட்டங்களுக்கு புதிய மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளுடன் புதியதாக இணைக்கப்பட்டுள்ள கிராமங்களுக்கும் மேற்கண்ட பதிவுத் துறையின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நகர்ப்புறங்களுக்கான புதிய வழிகாட்டி மதிப்பினை நிர்ணயித்து, அதன் அடிப்படையில் முத்திரை தீர்வை மற்றும் பதிவு கட்டணத்தை கட்டாயம் வசூலிக்கும் நோக்குடன் செயல்படுவது ஏற்புடையதல்ல.

ஆகவே மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள கிராம ஊராட்சிகள் அனைத்திற்கும், நகர்புறங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள புதிய வழிகாட்டி மதிப்பின் அடிப்படையில் புதிய திட்டங்களுக்கு நிர்ணயம் செய்வதை விடுத்து, அந்தந்த ஊராட்சிகளில் முன்பு நடைமுறையில் இருந்து வந்த வழிகாட்டி மதிப்பினை அடிப்படையாக கொண்டு நிர்ணயம் செய்யும் வகையில் வழிவகை செய்ய வேண்டுமேயன்றி, மாறாக மேற்படி பதிவுத் துறையின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள புதிய வழிகாட்டி மதிப்பின் அடிப்படையில் வழிகாட்டி மதிப்பினை உயர்த்தி நிர்ணயிக்கும் பதிவுத் துறை நிர்வாகத்தின் செயலானது பொதுமக்களிடையே மிகுந்த அதிருப்தியையும் மற்றும் மனக்குமுறலையும் ஏற்படுத்தி உள்ளது

ஆகவே பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மேற்கண்ட பொதுமக்களின் நியாயமான கோரிக்கையினை தங்களின் கூடுதல் கவனத்தில் கொண்டு, தாங்கள் கனிவுடன் பரிசீலித்து, மேற்கூறிய பிரச்சனைக்கு தகுந்த தீர்வு காண்பதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டு, தாங்கள் உரிய வழிவகை செய்ய வேண்டும் என தங்களை பணிவுடன் வேண்டுகிறோம்..

நன்றி!

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,

ஆ.ஹென்றி,
நிறுவனர் - தேசியத் தலைவர்.
FAIRA

நகல்:

1) உயர்திரு தலைமைச் செயலாளர் அவர்கள்,

2) மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்,

3) உயர்திரு பதிவுத் துறை செயலாளர் அவர்கள்,

4) உயர்திரு. பதிவுத் துறை தலைவர். அவர்கள்,